நாள்.27.02.2026

அசல் வழக்கு எண். 110/2024

வா. சா.1

பெயர். லெட்சுமி

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

வழக்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் எனது உடன்பிறந்த சகோதரர் மற்றும் சகோதரிகள் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வீட்டில் 5 பேருக்கு பங்கு உண்டு என பரிகாரம் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து வீடு என்றால் சரிதான். வீடு யார் பெயரில் உள்ளது என்றால் என்னுடைய தந்தை சுடலைகண்ணு பெயரில் உள்ளது. என்னுடைய தந்தை சுடலைகண்ணுவிற்கு தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் கிடையாது.

ஏர்வாடி கோவில் வாசலில் ஒரு பெட்டிகடை எனது தந்தைக்கு உள்ளது என்றால் சரிதான். மேற்படி பெட்டிகடையை இந்த வழக்கில் வழக்கு சொத்தாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். அதுபோக ஏர்வாடியில் என் தந்தைக்கு இரண்டு வயல்கள் உண்டு என்றால் சரிதான். மேற்படி வயல்களும் இந்த வழக்கில் வழக்கு சொத்தாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு எந்த ஆண்டு திருமணம் ஆனது என்றால் திருமணமாகி 40 ஆண்டுகள் இருக்கும். எனக்கு மணிகண்டன், பிரேமா என்ற இரண்டு குழந்தைகள் என்றால் சரிதான்.

எனது குழந்தைகளின் சிறுவயதிலேயே எனது கணவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் கணவர் இறந்த பிறகு எனது குழந்தைகளை எனது தாயாரிடம் விட்டு வெளியூர் சென்று விட்டேன் என்றால் சரிதான், வேலைக்காக சென்றேன். எனது இரண்டு குழந்தைகளையும் எனது தாயாரும் எனது சகோதரியான 3 ம் பிரதிவாதியும் தான் வளர்த்தார்கள் என்றால் சரியல்ல, எனது தாயார் தான் வளர்த்தார். எனது இரு குழந்தைகளையும் 3 ம் பிரதிவாதி தான் வளர்த்தார் என்றாலும் வழக்கிற்காக எனது தாயார் வளர்த்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. எனது தாயார் இறந்து 15–20 வருடங்கள் இருக்குமா என்றால் இருக்கும்.

எனது தாயாரின் இறப்பிற்கு பிறகு தாவா சொத்தான வீட்டை பங்கு வைப்பது தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி சமயத்தில் எனது தாயார் 3 ம் பிரதிவாதிக்கு உயில் கொடுத்தது பற்றி எனக்கு தெரிய வந்தது என்றால் சரியல்ல, 3 ம் பிரதிவாதி எனது தாயாரிடம்

உயில் எழுதி வாங்குவேன் என கூறினார். எனது தாயார் இறந்த பிறகு 20 வருடமாக தபசில் சொத்தில் பாகம் கேட்கிறேன் என்றால் சரிதான், 3 ம் பிரதிவாதி தான் தர மறுக்கிறார். நான் 20 வருடமாக என் மாமனார் வீட்டில் இருக்கிறேன் என்றால் சரிதான்.

வழக்கு சொத்தான வீட்டிற்கு வீட்டு தீர்வை 3 ம் பிரதிவாதி பெயரில் செலுத்தப்படகிறது என்றால் சரியல்ல, நானும் தீர்வை கட்டி ரசீது வைத்துள்ளேன். எத்தனை முறை தீர்வைகள் செலுத்தியுள்ளேன் என்றால் வீட்டில் உள்ள ரசீதுகளை பார்த்தால் தான் தெரியும். மேற்படி ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் யார் பெயரில் தீர்வை செலுத்தினேன் என்றால் எனது தம்பி பெயரில் செலுத்தினேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது, எனது பெயர் மட்டும் எழுத தெரியும். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. யார் மூலமாக படிக்க கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

நான் தாக்கல் செய்த பிராதை படித்து பார்த்தேனா என்றால் படிக்க தெரியாது, வேறு நபர்கள் மூலம் கேட்டு தெரிந்து கொண்டேன். எனது தாயார் எழுதிவைத்த உயில் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உயில் இருக்கும் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. உயில் பற்றி எனது பிராதில் குறிப்பிட்டு இருந்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 2005 ம் ஆண்டிலேயே உயில் இருக்கும் விவரம் எனக்கு தெரியும் என்றால் வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. ( சாட்சி தானாக முன்வந்து 2005 ல் உயில் இருந்ததாக சொன்னார்கள், அது செல்லாது என நான் சொன்னேன் என கூறினார். ) 2005 லிருந்து தற்போது வரை மேற்படி உயிலை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான்.

நான் கேட்கும் வழக்கு பரிகாரம் காலம் கடந்தது என்றாலும் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றாலும் சரியல்ல. என் தந்தைக்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களையும் சேர்க்காமல் தாக்கல் செய்த இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 2005 ம் ஆண்டு முதல் தற்போது வரை 3 ம் பிரதிவாதி தான் அனுபவத்தில் இருந்து தீர்வை செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. வீட்டின் முன்பாதியில் 3 ம் பிரதிவாதியும் பின்பாதியில் எனது தம்பி இருக்கிறார் என்றால் சரியல்ல, அனைவரும் கூட்டு குடும்பமாக இருக்கிறோம்.

வழக்கு சொத்து 3,4 பிரதிவாதிகளின் தனித்த அனுபவத்தில் இருக்கிறது என்றாலும் நான் செலுத்திய நீதிமன்ற கட்டணம் தவறானது

என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து திருக்குறுங்குடியில் எந்த தெருவில் அமைந்துள்ளது என்றால் கீழரதவீதி கம்மாங்குடி தெருவில் உள்ளது. நான் என்னுடைய பிராதில் நான் திருக்குறுங்குடி வடக்கு தெருவில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், அந்த விலாசத்தில் என் மகன் இருக்கிறான்.

என்னுடைய பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் நான் தாவா சொத்தில் இருப்பதாகவும், எனது மகன் திருக்குறுங்குடி வடக்கு தெருவில் இருப்பதாகவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், வழக்கு சொத்தில் கூட்டு குடும்பமாக நாங்கள் இருக்கிறோம். நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு சட்டப்படி செல்லக்கூடியது அல்ல என்றாலும் தள்ளுப்படிக்குரியது அல்ல என்றாலும் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க கூடுதல் சாட்சியத்திற்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.